அசல் வழக்கு எண் :31/2024
நாள் : 10.02.2026
வா.சா. : 1
பெயர் : உக்கம் ராஜ்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என் நண்பர். பிரதிவாதி நடத்தும் கடைக்கு பக்கத்தில்தான் நான் குடியிருந்தேன் என்றால் மாடியில் குடியிருந்தேன். அவர் என் நண்பர் என்ற முறையில் அவர் நிறுவனத்திற்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். பிரதிவாதி ஆக்கூர் கடைத்தெருவில் NR டிரேடர்ஸ் என்ற பெயரில் கடை நடத்திவருகிறார். நான் அதே தெருவில் வட்டிக்கடை நடத்திவருகிறேன். நான் நடத்தி வரும் வட்டிக்கடையில் யார் யாருக்கு எப்போது கடன் கொடுத்தேன் என்ற விவரத்தையும் ஆவணத்தையும் பராமரித்து வருகிறேன். நான் நடத்தும் கடையின் பெயர் மருதூர் பேங்கர்ஸ். பிரதிவாதிக்கு கடன் கொடுத்தது தொடர்பான என் நிறுவன ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவற்றை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். வட்டிக்கடை நடத்துபவர்கள் பொதுவாக ஆவணத்தின் அடிப்படையில் தான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான். எனவே நான் கைமாத்தாக எந்த ஆவணத்தையும் பெறாமல் கடன் கொடுத்தேன் என்பது பொய் என்றால் அது சரியல்ல. 09.12.2022 அன்று கடன் கொடுத்தேன். அந்த தேதியில் என்னிடம் புரோநோட் கொடுத்தார். அது தொடர்பாக நான் என் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. நான் வழக்கிற்கு முன்பு ஒரு அறிவிப்பு கொடுத்தேன் பிறகு காசோலை பெற்றுக்கொண்டு புரோநோட்டை திரும்ப கொடுத்துவிட்டேன் என்ற விவரம் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த புரோநோட்டும் காசோலையும்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் திருக்கடையூர் லட்சுமி விலாஸ் வங்கியில் கணக்கு வைத்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கசோலையில் உள்ள கையெழுத்துதான் பிரதிவாதியின் **கையொப்பம் என்றால் சரிதான் அது பிவாசாஆ 1** ஆகும். வாசாஆ 1 ஆவணத்தில் உள்ள கையொப்பமும் பிரதிவாதியின் கையொப்பம் தான். வாசாஆ 1 மற்றும் பிவாசாஆ 1 ஆவணங்களை சாட்சியிடம் காண்பித்து கேட்டபோது அவர் இரண்டிலும் உள்ள கையெழுத்துக்களில் வேறுபாடு உள்ளது என்கிறார். வாசாஆ 3 அறிவிப்பு என்னால் கொடுக்கப்பட்டது. பிரதிவாதிகள் கொடுத்த பதிலறிவிப்பு தான் வாசாஆ 4. அதில் உள்ள சங்கதிகளை மறுத்து மறுப்பு அறிவிப்பு எதுவும் நான் கொடுக்கவில்லை. என்னுடைய வழக்குரையிலும் வாசாஆ 4 ல் உள்ள சங்கதிகளை மறுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. குறிப்பாக எந்த மறுப்பும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 4 ஆவணத்திலேயே பிரதிவாதியின் வங்கி கரண்ட் அக்கவுண்ட் 2020 ல் முடிக்கப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி மற்றும் கணக்கு எண் மற்றும் தற்போது என்னிடம் காட்டப்படும் வங்கி மற்றும் கணக்கு எண் விவரங்கள் ஒன்று தான் என்றால் சரிதான். அந்த **வங்கி கணக்கு நகல் பிவாசாஆ 2** ஆகும். 2020க்கு பிறகு பிரதிவாதி கரண்ட் அக்கவுண்டை முடித்துவிட்டு OD அக்கவுண்ட்தான் பராமரித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2021 ல் லட்சுமி விலாஸ் வங்கி DBS வங்கியுடன் இணைக்கப்பட்டது என்றால் சரிதான் அந்த விவரம் எனக்கு தெரியும். 2020க்கு பிறகு பிரதிவாதிக்கு லட்சுமி விலாஸ் வங்கியில் கரண்ட்

அக்கவுண்ட் பழைய காசோலையை மோசடி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 1ல் உள்ள கையெழுத்து பிரதிவாதி மறுக்கும்போது அதை பொறுத்து நிபுணர் மூலம் நிரூபிக்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இதுவரை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தன்னுடைய கையொப்பம் இல்லை என்று மறுத்து நிபுணர் பரிசோதனைக்கு அனுப்ப மனுத்தாக்கல் செய்ய எனக்கு எந்த மறுப்பும் இல்லை. நான் நிறைய காசோலை வழக்குகள் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. ஒரு சில வழக்குகள் மட்டும் நடத்தி வருகிறேன். காசோலையின் மீது பணம் கொடுக்கும்போது செக்யூரிட்டி ஆவணம் பெறுவது வழக்கம் என்றால் நான் பழக்கத்தின்பேரில் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் அவரின் கடையிலிருந்த காசோலையை எடுத்து மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.